பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**16 03 2026** **6 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ளன.

**2.** வாக்களர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் கொடுப்பதைத் தடுக்க மாநிலம் முழுவதும் பறக்கும் படையினர் சோதனைகளைத தொடங்கியுள்ளனர்.

**3.** புதுச்சேரி யூனியன்பிரதேசத்தில் சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று தொடங்குகிறது.

**4.** ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ள பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி தயாராக உள்ளது என்று பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

**5.** **19** வயதுக்குட்பட்டோருக்கான ஸ்பேனிஷ் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்திய இணை பட்டம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சட்டப்பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ளன.

மாநிலம் முழுவதும், தலைவர்களின் சிலைகள் நேற்று மாலையில் இருந்தே துணியால் மூடி மறைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

அரசியல் சுவர் விளம்பரங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன.

நகர்ப்புறங்களில் பேருந்து நிறுத்தங்களில் உள்ள விளம்பர போர்டுகளில் இடம்பெற்றிருந்த அரசின் சாதனை விளம்பரங்கள் அகற்றப்பட்டன.

சென்னை தலைமைச் செயலகத்தில் அரசின் சாதனை விளம்பரங்கள் அகற்றப்பட்டன.

அமைச்சர்களின் அறைகளை மூடி சீல் வைக்கப்பட்டது.

மேலும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்கள், மேயர், துணை மேயர், நகராட்சித் தலைவர், துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர், துணைத் தலைவர்

அறைகளும், வார்டு கவுன்சிலர் அறைகளும் மூடி சீல் வைக்கப்பட்டன.

அவர்களின் அரசு வாகனங்கள் தேர்தல் பணிக்கு மாற்றப்பட்டன.

அனைத்து மாவட்டங்களிலும், ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதிக்கும் தலா 3 பறக்கும் படைகள், 3 நிலையான கண்காணிப்புக் குழுக்கள், 2 வீடியோ கண்காணிப்புக்குழுக்கள் நியமிக்கப்பட்டு கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக் குழு தினசரி 3 சுழற்சி முறையிலும், வீடியோ கண்காணிப்புக் குழு தினசரி 2 சுழற்சி முறையிலும் தனது பணியை மேற்கொள்ளும்.

தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறுதல் தொடர்பான அனைத்து புகார்களையும் பறக்கும் படை கவனிக்கும் எனறு தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

நிலையான கண்காணிப்புக் குழு, மாவட்ட எல்லை மற்றும் முக்கியமான சாலை சந்திப்புகளில் சோதனைச் சாவடி அமைத்து வாக்காளர்களுக்கு அளிப்பதற்காக பணம் அல்லது பரிசுப் பொருட்கள்

கொண்டு செல்லப்படுகிறதா என சோதனைகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி பெற்ற பொதுக்கூட்டம், பிரச்சாரம், பேரணிகளை தேர்தல் ஆணையம் வீடியோ பதிவு செய்ய உள்ளது.

தமிழகம் முழுவதும் **24** மணி நேரமும் சுழற்சி முறையில் ஆயிரத்து **872** பறக்கும் படை, கண்காணிப்புக் குழுக்கள் சோதனையைத் தொடங்கியுள்ளதாக திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சேலம் மாவட்டத்தில் **11** சட்டமன்றத் தொகுதிகளிலும் பறக்கும் படையினரின் பணிகள் நேற்று தொடங்கிவிட்டதாக மாவட்ட தேர்தல் அதிகாரி திருமதி பிருந்தா தேவி கூறியுள்ளார்.

சேலத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனை அவர் தெரிவித்தார்.

**(Voice Byte — Brinda Devi — 40 Sec)**

<<<>>>>

நாமக்கல் மாவட்டத்தில் 6 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரி திருமதி துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

**(Voice Byte — Durga Moorthy — 42 Sec)**

தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளதால் கடலூர் மாவட்டத்தில் அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டிட சுவர்களில் அரசியல் கட்சிகளின் விளம்பரங்கள் அகற்றப்பட்டு வருவதாக மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. சிபி ஆதித்ய செந்தில் குமார் தெரிவித்துள்ளார்.

கடலூரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

**(Voice Byte — Senthil Kumar — 35 Sec)**

<<<<>>>>

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலுக்கான அட்டவணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து, அங்குள்ள 30 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று தொடங்குகிறது.

இதற்காக நியமிக்கப்பட்டுள்ள 17 தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் இன்று முதல் மார்ச் 23ஆம் தேதி வரை வேட்பாளர்கள் தங்கள் மனுக்களைத் தாக்கல் செய்யலாம் என்று புதுச்சேரி தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. பி. ஜவஹர் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை மார்ச் 24 அன்று நடைபெறும் என்றும், மனுக்களைத் திரும்பப் பெற மார்ச் 26 கடைசி நாள் என்றும் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம். அசாம் ஆகிய மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி தயாராக உள்ளது என்று பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

இந்த மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், சமூக ஊடகப் பதிவில் அசாம் மற்றும்

புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மக்களின் ஆசீர்வாதத்துடன் மேற்கு வங்கம், தமிழ்நாடு மற்றும் கேரளாவிலும் தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றிக்கான பாதை அமைக்கப்பட்டு வருவதாகவும் திரு. நிதின் நபின் கூறியுள்ளார்.

<<<>>>>

நேபாளத்தில் ஆன்மிக சுற்றுலா சென்ற தமிழகத்தைச் சேர்ந்த 7 பேர் சாலை விபத்தில் உயிரிழந்த தையடுத்து, அவர்களது உடல்களை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட சாலை விபத்தில் 7 பேர் உயிரிழந்ததையடுத்து, அவர்களது உடல்களை விமானம் மூலம் தமிழகம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ஈரானில் **200** இலக்குகள் குறிவைத்து தாக்கப்பட்டதாக இஸ்ரேல் விமானப் படை தெரிவித்துள்ளது.

--------------

அமெரிக்காவுடன் பேச்சு நடத்த எந்தவித காரணமும் தற்போதைக்கு இல்லை என்று ஈரான் தெரிவித்துள்ளது.

--------------

நாடு முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை என்றும் விநியோகம் சீராக நடைபெற்று வருவதாகவும் எண்ணெய் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

--------------

சத்தீஸ்கட் மாநிலம் **Kanker** என்ற அடர்ந்த வனப்பகுதியில் இருந்து **4** வெடிகுண்டுகளை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

--------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் வாக்காளரிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் மத்திய பாதுகாப்பு படையினர் மற்றும் காவல்துறையினரின் கொடி அணிவகுப்பு நேற்று நடைபெற்றது.

--------------

திருநெல்வேலி தச்சநல்லூர் சந்தி மாரீத்தம்மன் திருக்கோவிலில் பங்குனி மாத பிறப்பை முன்னிட்டு சுமார் 2 ஆயிரம் பேர் கலந்துகொண்ட திருவிளக்கு பூஜை நேற்று நடைபெற்றது.

--------------

தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் சுற்றுலா தலத்திற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளது.

--------------

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டு முள்ளாட்சி மாரியம்மன் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற தீ மிதி திருவிழாவில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஸ்பெயின் ஓபன் ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்திய இணை பட்டம் வென்றது.

நேற்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் திவ்யான்ஷ் அகர்வால் - ஹரீஷ்

**ராகவேந்திர வைத்தியநாதன் இணை - ஸ்பெயினின் Xoel Alvarez - Adrian Rodriguez இணையை 21-12, 21-14 என்ற செட் கணக்கில் வீழ்த்தியது.**

**கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஹரீஷ் ராகவேந்திர வைத்தியநாதன் - ஜனனிகா ரமேஷ் இணை, இங்கிலாந்தின் Jasper Wong - Shraddha Gopalakrishnan இணையை 17-21, 21-13, 22-20 என்ற செட் கணக்கில் வீழ்த்தியது.**

**<<<<The End>>>>**